## மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு - 2015

மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதியாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 10(ஈ)(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணிப்பீட்டுத் தவறின் காரணமாக நிலையான சொத்துக்களது தேய்மானம் ரூபா 94,921 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பயிற்சித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான ரூபா 793,000 பெறுமதியுடைய உடன்படிக்கையுடனான கடப்பாடு ஐந்தொகைத் திகதியின் பின்னர் இரத்தாகியபோதும், அதற்குத் தேவையான சீராக்கம் மேற்கொள்ளப்பட வில்லை.

(இ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு தேசிய நிபுணத்துவக் கோட்பாடு உள்ளடங்கிய 1877 இறுவெட்டுக்களினதும் அலுவலக எழுதுகருவி வகைப் பொருட்களினதும் கையிருப்புப் பெறுமதியைக் கணிப்பிட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் வரிசை அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 1,123,118 தொகை 2016 மே 05 ஆந் திகதி வரையிலும் மீளளிப்புச் செய்யப்படாதிருந்தது.

(ஆ) 2006 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தாமாகச் சேவை விலகிய மூன்று ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 165,183 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 1,947,804 பற்றாக்குறை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,250,877 ஆகும். அதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டினது நிதி விளைவுகளில் ரூபா 4,198,681 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. அரசாங்க மானியம் ரூபா 6,112,401 இனால் அதிகரித்தபோதும், ஆண்டிற்கான ஊழியர் கிரயம் ரூபா 9,937,250 இனால் அதிகரித்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைந்தது.

முன்னைய 5 ஆண்டுகளது நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறையான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ஏனைய

ஆண்டுகளில் மிகையாக மாறியிருந்தது. ஊழியர்களது ஊதியமும் நடைமுறையல்லாச் சொத்துக்களது தேய்மானமும் கருத்திற் கொள்ளப்படுமிடத்து ஆணைக்குழுவின் பங்களிப்பு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 30,198,474 மற்றும் 41,989,597 ஆகும். அது 2013 ஆம் ஆண்டில் ரூபா 39,198,869 வரை குறைவடைந்தபோதும், மீண்டும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 51,064,746 மற்றும் மீளாய்வாண்டளவில் ரூபா 58,555,774 வரை அதிகரித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி முறைமையைத் திட்டமிடல், ஒருங்கிணைத்தல், அபிவிருத்தி செய்தல், தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் பயிற்சிக் கோட்பாட்டைப் பேணுதல் என்பன நிறுவனத்தை ஸ்தாபித்ததன் நோக்கமென குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது அந்நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) 500 புதிய அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் புதிதாகப் பதிவு செய்துகொள்ளுதலும் 400 பதிவுகளைப் புதுப்பித்தலுக்குமான மதிப்பாய்விற்கு இலக்கிடப்பட்டபோதும், முறையே 297 நிறுவனங்களும், 343 நிறுவனங்களும் மாத்திரமே மதிப்பாய்வுக்குள்ளாகின. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 24 சதவீத குறைவாகும்.

(ii) அரச துறையில் 503 கற்கை நெறிகளும் தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளது 108 கற்கை நெறிகளும் தேசிய பயிற்சி மட்டத்திற்காக தரப்படுத்தல் மதிப்பாய்விற்கு உள்ளாக்கப்பட்டிருந்த போதும் முறையே 339 மற்றும் 53 கற்கை நெறிகள் மாத்திரம் மதிப்பாய்வுக்குள்ளாகின. அந்த நிறுவனங்களது 259 கற்கை நெறிகள் புதுப்பித்தலுக்காக மதிப்பாய்வு செய்யப்பட்டபோதும், 177 கற்கை நெறிகள் மாத்திரமே புதுப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சி ஒன்றின் பிரகாரம், தொழில்சார் பயிற்சி சம்பந்தமான 9522 கற்கை நெறிகள் நடாத்தபடுவதாகவும் அதில் மீளாய்வாண்டின்போது தேசிய பயிற்சி மட்டம் சம்பந்தமாக 2323 பாடநெறிகள் அதாவது, 24 சதவீதம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சகல கற்கை நெறிகளும் தேசிய தொழில்சார் மட்டத்தின் கிழ் பேணப்படுவது ஆணைக்குழுவின் பொறுப்பானபோதும், மேற்படி கற்கை நெறிகளைப் பதிவு செய்து கொள்வதற்குப் போதிய வேலைத்திட்டமொன்று ஆணைக்குழுவிடம் இருக்கவில்லை.

(இ) தேசிய தொழில்சார் தகைமையில் 6 மட்டம் சம்பந்தமாக 60 சான்றிதழ்களை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டபோதும், 09 சான்றிதழ்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. தேசிய தொழில்சார் தகைமையில் 5 மட்டம் சம்பந்தமாக 1471 போன்ற குறைந்த எண்ணிக்கையிலான சான்றிதழ்களே. வழங்கப்பட்டிருந்தன. இதற்கமைய தேசிய தொழில்சார் தகைமையில் 5 மற்றும் 6 மட்டங்களில் பொருத்தமானவர்கள் உருவாதல் குறைந்த மட்டத்திலிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அரச துறை மற்றும் தனியார் துறைகளினது தொழில்சார் பயிற்சிக் கற்கை நெறிகளுக்கு தேசிய தொழில்சார் தகைமை மட்டத்தைப் பெறுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நிதி உதவி அளிக்கும் நடைமுறையை ஆணைக்குழு அமுல்படுத்தியபோதும், அதற்கான நிறுவனங்களைத் தெரிவு

செய்தல் பொருட்டு ஏற்றுக்கொள்ளத்தக்க விதி முறைகள் தீர்மானிக்கப்படாதிருந்தன. மேலும், ஆண்டின்போது நிதி உதவியாக ரூபா 2,569,912 வழங்கப்பட்டபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 13 கற்கை நெறிகள் தரமதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை மீளாய்வு செய்து, ஆரம்ப செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் ஊடகத் தொழில்நுட்பப் பிரிவினது தொழில்சார் பயிற்சித் திட்டத்தை நாளதுவரையாக்கல், 6 வருடாந்த மெய்மையாய்வுகளை மேற்கொண்டு வரைவு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல், கணனி மென் பொருளைக் கொள்வனவு செய்தல், பூகோள தகவல் முறைமையை விரிவடையச் செய்தல் போன்ற பணிகளை நிறைவேற்றாது அடுத்துவரும் ஆண்டிற்கு அவை பின்போடப்பட்ட போதும் அதற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) ஆண்டின்போது 6 ஆராய்ச்சிகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 500,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும், ஒரு ஆராய்ச்சியேனும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின்போது நிபுணத்துவ அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு ரூபா 28.51 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டின்போது ரூபா 27.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செயலாற்றல் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவில்லை. செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படவில்லை என கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(i) இலங்கையர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ள 10 வெளிநாட்டு நிறுவனங்களது அதிகாரிகளுடன் இணைந்து இலங்கையின் தேசிய தொழில்சார் தகைமை மட்டத்தை சர்வதேச நிலைமைக்கு ஒத்ததாக செய்வதற்கு உறுதிபூணுதல், தொழில்சார் நிறுவனங்களிலிருந்து வெளிவரும் பட்டதாரிகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உடன்படிக்கைகளுக்குட்படல் மதிப்பாய்வு செய்வதற்கான நியமங்களை மீளாய்வு செய்தல், மதிப்பாய்வு வேலைகளுக்கான மீளாய்வு மற்றும் அவ்வேலைகளது வினைத்திறன் மற்றும் நியமங்கள் என்பவற்றை உயர்த்துவதற்குப் பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவித்துப் பதிவுசெய்தல் மற்றும் 5 ஆம் 6 ஆம் மட்டத்தேசிய தொழில்சார் தகைமைகளை மதிப்பாய்வு செய்வோரை ஆட்சேர்த்தல்.

(ii) ஆணைக்குழு இனங்கண்டிருந்த புதிய முக்கியத்துவத் துறைக்கு 10,000 மாணாக்கர்களை ஆட்சேர்க்கக்கூடியவாறு மாதிரிக் கற்கை நெறிகளை அபிவிருத்தி செய்தல், மாணாக்கர்களின் பொருட்டு செயலாற்றலின் அடிப்படையில் புலமைப் பரிசில் முறைமையை அறிமுகஞ்செய்தல், தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 5, 6, 7 என்பவற்றிற்கு அரசாங்க ஆட்சேர்ப்பு இலக்கைப் பூர்த்தி செய்வதற்காகத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் கொள்கைகளையும் நிதிசார் வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல், தொழில்சார் தொழில்நுட்பத் துறையில் ஆண்பாலர், பெண்பாலர் என (Gender Policy) கொள்கை ஒன்றைத் தயாரித்தல் மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வித் துறையில் பிரதிமையை அதிகரித்தலுக்கான தொழில்சார் ரீதியான மேம்பாட்டுத் திட்டத்தை அபிவிருத்தி செய்து அமுல்படுத்தல்.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

மேல் மாகாணத்திற்கென தொழில்சார் கல்விப் பயிற்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு களணி பல்கலைக்கழகத்திற்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா 199,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கைப் பிரகாரம், அத்திட்டம் 2014 மே 05 ஆந் திகதி முடிவடைய வேண்டுமாயினும், அவ்வாறு முடிவடையாமையால் 2016 சனவரி 13 ஆந் திகதியன்று உடன்படிக்கையை ஆணைக்குழு முடிவுறுத்தியிருந்ததுடன் பல்கலைக்கழகம் முடிவடையாத அறிக்கையை நிறுவனத்திடம் வழங்கியிருந்தது. பயிற்சித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்குப் போதுமான முன் நடவடிக்கைகள் 2016 மே 05 ஆந் திகதியளவிலும் அமுலாக்கப்படவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய தொழில்சார் தகைமை வழங்கலின் பொருட்டு நிபுணத்துவ அடிப்படையிலான மதிப்பாய்வு நடவடிக்கைகளுக்கு மதிப்பாய்வாளரை நியமிப்பது 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், 2015 ஆம் ஆண்டு முடிவு வரை மதிப்பாய்வாளர்களுக்கான அவசியத்தைச் சரிவர இனங்கண்டு போதியளவு நபர்களை ஆள்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக மேலும் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு இறுதிவரை ஆட்சேர்க்கப்பட்ட மொத்த மதிப்பாய்வாளரின் எண்ணிக்கை 1945 ஆனபோதும், அம்மதிப்பாய்வாளர்கள் செயலாற்றும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டமை உறுதிசெய்யப்படவில்லை.

(ii) மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினால் 2945 கற்கை நெறிகளை மதிப்பாய்வு செய்வதற்காக மதிப்பாய்வாளர்கள் நியமிக்கப்பட்டபோதும், அது போதியதாக இல்லாமையால் 3188 கற்கை நெறிகளை மதிப்பாய்வு செய்வதற்கு நிறுவனம் தெரிவு செய்திருந்த மதிப்பாய்வாளர்களுக்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது. இதன் காரணமாக, அம்மதிப்பாய்வுகளது சுதந்திரத்தன்மை தொடர்பாக உறுதி செய்து கொள்ள முடியவில்லை.

(iii) மதிப்பாய்வாளர்களை நியமனஞ் செய்த பின்னர் 2 மாதங்களுக்குள் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டியபோதும், அதன் பொருட்டு 3 முதல் 8 மாதங்களும் மதிப்பாய்வின் பின்னர் கொடுப்பனவு செய்தல் 5 முதல் 20 மாதங்களும் கழிந்திருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) கடந்த சில ஆண்டுகளில் ஆராய்ச்சிப் பெறுபேறுகள் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தப்படுவது குறைந்த மட்டத்திலிருந்ததுடன், அது தொடர்பாகப் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 546,930 மற்றும் ரூபா 493,000 செலவழித்து தயாரிக்கப்பட்ட 09 ஆராய்ச்சி அறிக்கைகளின் விடயங்கள் கணக்காய்வுத் தினமாக 2016 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் வெளியிடப்படவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலானகொடுக்கல் வாங்கல்கள்

தாபன விதிக் கோவையின் XV அத்தியாயத்தினது 4.3.1 மற்றும் 4.4 பிரிவுகளின் பிரகாரம் நிறைவு செய்யப்பட வேண்டிய கட்டாய வேலைக்காலம் 55 ஆண்டுகளாவதற்கு முன்னர் 10

ஆண்டுகள் நிறைவு செய்யப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக 48 வயதான உத்தியோகத்தர் ஒருவர் சீனாவில் உள்ள வூஹான் பல்கலைக்கழகத்தில் 3 ஆண்டுகால கொள்கைப் பகுப்பாய்வுக் கற்கைநெறிக்கென தெரிவு செய்யப்பட்டு முழுச் சம்பளத்துடன் கூடிய கல்விசார் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. அக்கற்கை நெறியின் மொத்தக் கிரயம் ரூபா 8,048,160 ஆகும். மீளாய்வாண்டில் கற்கை நெறிக் கட்டணமாகச் செலவிடப்பட்ட தொகை ரூபா 2,038,826 ஆகும். விண்ணப்பதாரர்களாலேயே தெரிவு செய்யப்பட்ட இக்கற்கைநெறிகளது தொடர்பும் கிரயமும் நாட்டிற்கும் நிறுவனத்திற்கும் போதிய நலனை வழங்குமா எனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயபூர்வமான மதிப்பாய்வு மேற்கொள்ளப்படவில்லை.

## 4.5 தாமதமாகிய செயற்திட்டங்கள்

நான்கு கைத்தொழில்களில் நிலவிய கோரிக்கைகளுக்கும் வழங்கலுக்குமிடையேயான இடைவெளி தொடர்பான அளவை (Survey on Industies Demand Gap) 2014 நவம்பர் 08 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியபோதும், கணக்காய்வுத் தினமாக 2016 மே 05 ஆந் திகதி வரை அது முடிவடையவில்லை.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் பதவி வெற்றிடங்கள் 26 ஆகும். அதில் 21 நிறைவேற்று தரத்திலானவை. சேவையில் ஈடுபட்டிருந்த இரு நிறைவேற்றுதர உத்தியோகத்தர்கள் புலமைப்பரிசிலில் வெளிநாடு சென்றிருந்தனர். இவ்வெற்றிடங்கள் நிரப்படாமையால் மதிப்பாய்வாளரை நியமித்தல், நிறுவன மற்றும் கற்கை நெறிகள் தேசிய தொழில்சார் பயிற்சி மட்டம் (NVQ) சம்பந்தமாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் தரமதிப்பீடு செய்தல் போன்ற நிறுவகப் பணிகளின் செயலாற்றல் தொடர்பில் பாதகமாகத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருக்கும் தரமதிப்பாய்வு மற்றும் பயிற்சி பணிப்பாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் பொருட்டு 6 ஆண்டுகளுக்கு மேலாக பதில் கடமையாற்ற நியமனம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், பிரதி பணிப்பாளர் நாயகம் இரு இடங்களில் கடமையாற்றும் அடிப்படையில் நிபுணத்துவ அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். பதில் கடமை பணிப்பாளர் நாயகப் பதவியும் பதில் கடமை அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. 03 மாதங்களுக்கு மேல் பதில் கடமை அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட முடியாதிருந்தபோதிலும் அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவு பதவியணியில் 5 உத்தியோகத்தர் இருக்கவேண்டுமாயினும் அதில் 03 உதவிப் பணிப்பாளர் பதவிகள் நிலவியமையால் போதியளவு கணக்காய்வை மேற்கொள்ளமுடியவில்லை. மேலும், நிபுணத்துவ அபிவிருத்தி செயற்திட்டப்பிரிவின் செலவினம் கணக்காய்வு செய்யப்படவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பிடுகையில் 43 சதவீதம் முதல்

100 சதவீதம் வரை வேறுபாடுகள் காணப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.